**CC**.**No**.155/2025

**Date**: 14.05.2026

**ம.சா.** 2.பாலசுப்பிரமணியன், 41/2026, த/பெ. நம்பையா, மரவியாபாரம், காரைக்குடி
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**குறுக்கு விசாரணை**

**1) புகார்தாரரை எவ்வாறு தெரியும் என்றால் மரவியாபாரம் மூலமாக தெரியும். பணம் கொடுத்ததாக கூறப்படும் தேதியில் எதற்காக புகார்தாரர் வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றால் மரவியாபாரம் தொடர்பாக சென்றேன். புகார்தாரர் மரவியாபாரம் செய்கிறாரா என்றால் செய்கிறார். அந்த தேதியில் யார் யார் இருந்தார்கள் என்றால் புகார்தாரர் செல்வகுமார், எதிரி அழகம்மை, அழகம்மையின் அப்பா சுகுமார் மற்றும் நான் இருந்தோம். நான் செல்வதற்கு முன்பாகவே பணம் பெற்றார்களா என்றால் நான் செல்லும்போது எதிரி அழகம்மை பணம் எண்ணிக்கொண்டிருந்தார். எதிரி கடனாக பெற்றார் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் அங்கு உள்ள புகார்தாரர் மற்றும் எதிரி என்னிடம் கூறினார். எவ்வளவு ரூபாய் மற்றும் எந்த எண்ணிக்கை தாள்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல சரியல்ல 80 ஆயிரம் பெற்றார் 500 ரூபாய் தாள் ஆகும். நான் எண்ணிப்பார்க்கவில்லை என்றால் சரிதான்.**

**2) ம.சா.ஆ.2 கடனுறுதிசீட்டு எதற்காக நான் எழுதினேன் என்றால் புகார்தாரர் மற்றும் எதிரி கேட்டுக்கொண்டதால் எழுதினேன். யார் வாசகம் சொன்னார்கள் என்றால் இருவரும் சொன்னார்கள். முதலில் யார் கையொப்பம் செய்தார் என்றால் எதிரி. எத்தனை கையொப்பம் என்றால் ஒரு கையொப்பம் செய்தார். அதன் பின்பு யார் கையொப்பம் செய்தார் என்றால் எதிரியின் அப்பா கையொப்பம் செய்தார். அனைவரும் ஒரே பேனாவினால் கையொப்பம் செய்தார்களா என்றால் நான் நிரப்பிய பேனாவில் கையொப்பம் செய்தேன் . அவர்கள் வேறு பேனாவினால் கையொப்பம் செய்தார்கள். நான் சொன்னவாறு சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் ம.சா.ஆ.1 கடன் சீட்டு எழுதப்படவில்லை என்றாலும், பழைய கடனுக்கு கொடுக்கப்பட்ட கடன் சீட்டை**

**தவறாக பயன்படுத்தி தற்போதைய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு நீண்ட நாட்களாக பழக்கம் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.14 17:26:12 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.